முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

O.S. No.17/2019 தேதி 12.02.2025

வாதி தரப்பு சாட்சி –1 (சுரேஷ் க/பெ. இருசப்பன்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**4–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

1. நானும் 4ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தியும் சேர்ந்து ஏழைமுத்து, அர்ஜுனன், மூர்த்தி ஆகியோர்களுக்கு எதிராக தடையுத்தரவு கோரி அ.வ.எண்.234/2010 தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். என் தகப்பனார் தற்போது உயிருடன் இல்லை. நான் தாக்கல் செய்த 2 முதல் 21 ஆவணங்கள் அனைத்தும் 4ம் பிரதிவாதி தந்தை குப்புசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணங்களை 4ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்திக்கு தெரியாமல் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.
2. தாவா சொத்துக்கான தீர்வை ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் பெயரில் எதுவும் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் தொந்தரவு செய்யக்கூடாது என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சாட்சி பதிலளிக்கவில்லை. தாவா சொத்தின் பாத்தியதை குறித்து என்னிடம் எந்த ஆவணங்களும் இல்லாததால் தான் உரிமை விளம்புகை கோரவில்லை என்றால் சரியல்ல.
3. தாவா சொத்து தற்போது கரம்பாக உள்ளது என்றால் கடந்த ஒரு வருடமாக தண்ணீர் இல்லாததால் பயிர் வைக்கவில்லை. 4ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி நான் அவரிடம் இருந்து நிலத்தை ஏமாற்றியதாக என்மீது கடலூர் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தார் என்றால் சரிதான், அதன்மீது நடந்த விசாரணையில் நான் பங்கேற்றேன், பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாவா சொத்து அரசாங்கத்திற்கு சொந்தமானது அதில் 4ம் பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் அனுபவத்தில் உள்ளனர் அதை எழுதிக்கொடுப்பதற்கு அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.
4. நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் அது நடைமுறைக்கு ஒவ்வாதது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை நான் எந்த காலத்திலும் கைப்பற்றி அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல, இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் முகாந்தரமும் கிடையாது என்றாலும் வழக்கு தள்ளுபடிக்கு அருகமானது என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

மறு விசாரணை இல்லை.